செ.வெ.எண். 28/மார்ச் தேதி : 11.03.2017

# தருமபுரி மாவட்டம், 180 பயனாளிகளுக்கு ரூ. 4 கோடியே 44 இலட்சத்து 10 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் வழங்கினார்.



தருமபுரி மாவட்டம், தருமபுரி மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கூட்டரங்கில்180 பயனாளிகளுக்கு ரூ. 4 கோடியே 44 இலட்சத்து 10 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் வழங்கி பின்னர் தெரிவித்ததாவது :-

தருமபுரி மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கூட்டரங்கில் புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் 76 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கி கடனாக ரூ. 3 கோடியே 23 இலட்சத்து 80 ஆயிரமும், 21 பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான தனி நபர் கடனாக ரூ. 2 இலட்சத்து 10 ஆயிரமும், பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா (கிராமின்) திட்டத்தின்கீழ் 2016-17 ம் ஆண்டிற்கான 66 பயனாளிகளுக்கு வீடு அனுமதிக்கான ஆணைகளையும், உழவர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 16 பயனாளிகளுக்கு விபத்து நிவாரணமும், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பதிவு செய்த 60 வயது பூர்த்தி அடைந்தவர்களுக்கு வாரியத்தினால் வழங்கப்படும் ஓய்வூதியம் 11 நபர்களுக்கு தலா ரூ. 1000 வீதம் ரூ. 11 ஆயிரத்திற்கான காசோலையினை முதல் தவணையாக வழங்கியும், மேலும் இத்திட்டத்தின்கீழ் 3300 பயனாளிகளுக்கு ரூ. 33 இலட்சம் நிதி வரபெற்றுள்ளது. முதலமைச்சர் அவர்களின் விபத்து காப்பீடு நிதியாக தலா ரூ. 50 ஆயிரம் வீதம் 3 பயனாளிகளுக்கு ரூ. 1 இலட்சத்து 50 ஆயிரத்திற்கான காசோலையை நிவாரண தொகையாக வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் தருமபுரி, காரிமங்கலம் மற்றும் அரூர் வட்டத்திற்குட்பட்ட 3 பயனாளிகளுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதி பெறும் பயனாளிகளுக்கு ரூ. 4 இலட்சத்து 50 ஆயிரமும், என 180 பயனாளிகளுக்கு ரூ. 4 கோடியே 44 இலட்சத்து 10 ஆயிரத்திற்கான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தருமபுரி மாவட்டத்தில் கூரையே இல்லாத நகரத்தை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் மத்திய மாநில அரசானது பிரதான மந்திரி ஆவாஸ் யோஜானா திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பயனாளிக்கும் ரூ. 2 இலட்சம் கடன் வழங்கி ஒவ்வொரு தனிநபரும் சொந்த வீட்டைக் கட்டிக்கொள்ளும் நோக்கத்துடன் இத்திட்டம் ஏற்படுத்தி செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதேபோல் அம்மாவின் அரசுதான் நமது மாவட்டத்திற்கு ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர் திட்டத்தை கொடுத்து அது செயல்படுத்தப்பட்டு பொதுமக்களின் தண்ணீர் பிரச்சினையை தீர்த்து வைத்தது. அதுமட்டுமில்லாமல் தொழிலாளர் நலத்துறையின் மூலம் கிராமந்தோறும் கட்டுமான தொழிலாளர்கள் தங்களுடைய பெயரை பதிவு செய்யும் வகையில் தொழிலாளர் நலத்துறையின் மூலம் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதுமட்டுமில்லாமல் 60 வயதிற்கு மேல் உள்ளவர்கள் தொழிலாளர் நலத்துறையின் மூலம் உதவித்தொகை, ஓய்வூதியம், நிவாரணத் தொகை, விபத்துக்காப்பீடு உள்ளிட்டவைகளுக்கு முறையாக விண்ணப்பித்து அதனை பரிசீலிக்கப்பட்டு தகுதியுள்ள விண்ணப்பத்தாரர்களுக்கு இச்சலுகைகள் வழங்கப்படும். பொதுமக்கள் இத்திட்டத்திற்கு விண்ணப்பம் செய்து பயன்களை பெற முன் வரவேண்டுமென மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. அ. சங்கர், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. எம். காளிதாசன், கோட்டாட்சியர் திரு. இராமமூர்த்தி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. இரா. சண்முகசுந்தரம், மாவட்ட தொழிலாளர் நலத்துறை அலுவலர் திருமதி. கோட்டீஸ்வரி, முன்னோடி வங்கி மேலாளர் திரு. முத்தரசு, புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. நாராயணன், பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை தலைவர் திரு.கே.வி. அரங்கநாதன், மத்தியக்கூட்டுறவு வங்கி இயக்குநர் திரு. வேலுமணி, கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கத் தலைவர்

திரு. எம். பழனிசாமி, முன்னாள் ஒன்றியக்குழு தலைவர் திருமதி. லலிதா குப்புசாமி உட்பட துறை ரீதியான அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.